# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 04 திங்கட்கிழமை (20.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:354


# முகமாலை ஊடாக ஒரே தடவையில் குடாநாட்டுக்குத் தேவையான பொருள்கள்

## ஏராளமான லொறிகள் தேவைப்படுவதால் உரிமையாளர்களைத் தந்துதவக் கோரிக்கை

ஜனாதிபதி மஹிந்த உத்தரவு

கொழும்பு,நவம்பர்20

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை முகமாலை ஊடாக ஏ-9 பாதையில், ஒரே தடவையில் கொண்டு செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறு -

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

**சமயத் தலைவர்களும், மக்கள் பிரதிநிதிகளும், மக்களும் விடுத்த வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டும், எதிர்வரும் வாரங்களில் சீரற்ற காலநிலை தொடரும் என்பதாலும் ஜனாதிபதி, முகமாலை ஊடாகப் பொருள்களை ஒரே தடவையில் எடுத்துச்செல்லுமாறு பணித்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

★ இந்தப் பணியைச் செய்வதற்கு ஏராளமான - பல நூற்றுக்கணக்கான - லொறிகள் தேவைப்படும் என்பதால் அவற்றைத் தந்துதவுமாறும் அரசாங்கம் கேட்டுள்ளது.

★ ஓமந்தைமற்றும்முகமாலைசோதனைச் சாவடிகள் ஊடாக வாகன அணிகளைக் கொண்டுசெல்வதற்கு சுயேச்சையான அமைப்புகளின் உதவியை அரசாங்கம் நாடும்.

★ யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் 'சீல்' செய்யப்படும்; வாகன அணி யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்ததும் சிவிலியன், மதப் பிரமுகர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் முன்னிலையில் 'சீல்' திறக்கப்படும்.

★ மனிதாபிமான நோக்குடன் பொருள்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் பாதுகாப்பான பயணத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்புகளிடமும் கேட்டுக்கொள்ளப்படும்.

★ குடாநாட்டுக்கு எடுத்துச்செல்லப்படும் அத்தியாவசிப் பொருள்கள் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளின் கண்காணிப்புடனேயே விநியோகிக்கப்படும்.

★ அவசர தேவைக்கு விநியோகிப்பதற்கென ஒதுக்கிச் சேமித்து வைக்கப்படும் மேலதிக பொருள்களும் (Buffer stock) ஏனைய அத்தியாவசியப் பொருள்களும் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபரின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்படும்.

★ ஒரேதடவையில் பொருள்களை எடுத்து வரும் வாகன அணிக்கு லொறிகளைக் கொடுத்து உதவ விரும்பும் லொறி உரிமையாளர்கள் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுமாறு பகிரங்க வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

**சர்வதேச அமைப்புகளின் உதவியும் கோரப்படுகிறது**

★ யாழ்ப்பாணக்குடாநாட்டில் வாழும் மக்களுக்குத் தேவைப்படும் சகல பொருள்களையும் மனிதாபிமான ரீதியில் அனுப்பி தேவையான மேலதிக கையிருப்பை (Buffer stock) வைத்திருப்பதற்கு சர்வதேச மனிதாபிமான அமைப்புகளின் உதவியையும் அரசு கேட்டுக்கொள்கிறது.

★ இந்த ஏற்பாடு மக்களின் தேவைகளை

(06ஆம் பக்கம் பார்க்க)

# மானவர்கள் படுகொலையைக் கண்டித்து வவுனியாவில் இன்று பூரண ஹர்த்தால்!

## மிலேச்சத்தனமான அட்டூழியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

வவுனியா, நவ.20

வவுனியா - தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஐவர் சீருடையுடன் கொடூரமாகச் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அரச படைகளின் அட்டூழியம் என்று தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அப்பாவி மாணவர்கள் மீது புரியப்பட்ட இந்தக் கொடூரத்தைக்கண்டிக்கும்முகமாகவவுனியாமாவட்டம் முழுவதும் இன்று முழு அடைப்புப் போராட்டத்தில் ஈடுபடுமாறு தமிழ் பேசும் மக்களைக் கேட்டிருக்கின்றது.

வவுனியா - தாண்டிக்குளத்தில் ஏ-9 வீதியில் சென்ற இராணுவ வாகனம் ஒன்று அப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் கண்ணி ஒன்றில் சிக்கியதையடுத்து, அருகே உள்ள விவசாயக் கல்லூரியினுள் புகுந்த சீருடையினர் அங்கு நின்றிருந்த அப்பாவி மாணவர்கள் ஐவரைச் சுட்டுக் கொன்றனர். 12 மாணவர்களைப் படுகாயப்படுத்தினர்.

இந்தக் கொடூரக் கொலைச் சம்பவம் வவுனியாவை அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கின்றது.

விவசாயக் கல்லூரியினுள் களப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த மாணவர்களில் ஐவரே - அவர்கள் சீருடையில் இருந்த சமயத்தில் - இழுத்துச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மாணவர்களும், மாணவிகளுமாகசுமார் முப்பது பேர் தங்கள் கைகளை உயர்த்தி, 'நாங்கள்மாணவர்கள்' என்றுகதறிய போதும்

(06ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா தவசிக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க இச்சடலத்தின் தலைப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்படுகிறது எனவும் -

சடலத்தில் இருந்து பெறப்பட்ட பற்றுச் சீட்டுகளின் மூலம் இறந்தவர் ஒரு வியாபாரியாக இருக்கலாம் எனவும் - வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனை மற்றும் அடையாளம் காணும்பொருட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (த-12)

# வவுனியா விவசாயக் கல்லூரிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க உத்தரவு

## அச்சத்தின் பிடியில் மாணவர்கள்

வவுனியா,நவ 20

வவுனியா - தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரியின் பாதுகாப்புக்குத் தற்காலிக பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டிருக்கிறார்.

கிளைமோர் தாக்குதல் சம்பவத்தை யடுத்து, விவசாயக் கல்லூரியினுள் மாணவர்கள் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்திய நீதிவான் இந்த உத்தரவைப் பொலிஸாருக்கு விடுத்தார்.

மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன்,

(06ஆம் பக்கம் பார்க்க)

# இணைத்தலைமை இன்று வாஷிங்ரனில் கூடுகிறது

## ஏ-9 வீதி விடயத்தில் தரப்புக்களுக்கு அழுத்தம்?

வாஷிங்ரன், நவ.20

இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமையின் கூட்டம் இன்று அமெரிக்க தலைநகர் வாஷிங்ரனில் நடைபெறவுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் இக் கூட்டத்தில் பங்கேற்கின்றன.

அமெரிக்காவின் ரிச்சர்ட் பௌச்சர், நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம், ஜப்பானின் யசூசி அகாஷி, ஐரோப்பிய ஒன்றியத்தின் பெனிட்டா பியெர்ரோ வால்ட்னெர் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர். (06ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய வெளியுறவுச் செயலர் புதனன்று கொழும்பு வருகிறார்

## பிரதமர் மன்மோகன் சிங்கின் செய்தியுடன்

கொழும்பு,நவ.20

இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன், நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பு வருகிறார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் முக்கிய செய்தியுடன் கொழும்பு வரும் மேனன் இலங்கை அரசத் தலைமையிடம் அந்தச் செய்தியைக் கையளிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் படும் அவலங்கள், மனிதாபிமான நெருக்கடிகள் இதன் விளைவாகதமிழ் நாட்டில் உருவாகியுள்ள எதிரொலிப்புகள் என்பவற்றை

(06ஆம் பக்கம் பார்க்க)

# 8 அரசியல் பிரமுகர்களுக்கு கொலை அச்சுறுத்தலாம்

கொழும்பு,நவ 20

அரசியல் பிரமுகர்கள் 8 பேருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தின வாரத்தில் கொலை அச்சுறுத்தல் இருக்கிறது என்று அரச புலனாய்வுப் பிரிவினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தின வாரத்தின் இறுதி நாள் வரை மேற்[illegible] பிரமுகர்கள் எட்டுப் பேரும் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும் - அரச புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர்கள் நிமல் சிறிபாலடி சில்வா, மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர, கெஹெலிய ரம்புக் வெல, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**கதிர்காமத்தம்பி நாகராசா**

(சமாதான நீதிவான், முன்னாள் அதிபர், யா/மகாஜனாக் கல்லூரி, இந்து கலாசார சமூகசேவைகள் அமைச்சு யாழ். மாவட்ட இணைப்பாளர்)

தோற்றம் 29.11.1938 மறைவு 07.10.2006

சாவைப் பற்றி நினைக்காமல் கடமைகளை செய்தவரே
சரித்திரத்தில் உம் பேர் நிலைக்கும் ஐயா!
நாமும் உம் நினைவுடனே நம்பணி தொடர்ந்திடுவோம்.

8ஆம் கட்டை, மல்லாகம். (55425) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை சிவசம்பு

(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் - முல்லைத்தீவு வலயம்)

விதானையார்வளவு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் இல. 12, C.D.I. தொடர்மாடி, நோகினி வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சிவசம்பு 18.11.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் திரு. திருமதி சங்கரப்பிள்ளையின் மருமகனும் சந்திரஞானத்தின் (ஓய்வுபெற்ற திட்டமிடல் அதிகாரி கச்சேரி - முல்லைத்தீவு) அன்புக் கணவரும் காலஞ்சென்ற வர்களான திருமதி அகிலேஸ்வரி, அகிலேஸ்வரன் மற்றும் கமலாதேவி, விமலாதேவி (ஆசிரியை - விசாலாட்சி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அரசரட்ணம் (புன்னாலைக்கட்டுவன்) மற்றும் சதானந்தன் (உதவி நில அளவை அதிகாரி - திருகோணமலை), சர்வானந்தா (முன்னாள் பிரதம லிகிதர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொரளை மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 0112 594925. (55418) தகவல்: திருமதி வி. சர்வானந்தா (சகோதரி)

### கந்தர் நாகராசா (கறுப்பையா)

(ஓய்வுபெற்ற தூறைமுக ஊழியர்)

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தர் நாகராசா நேற்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் உருக்கு மணியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி (இந்தியா), தியாகராசா, திருமகள், கெங்கராசா, நிரஞ்சனா, வரதராசா (வரதன்), தில்லைராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினசிங்கம் (இந்தியா), நவரசதேவி, சிவப்பிரகாசம், நகுலேஸ்வரி, சிவசெல்வராசா (வர்த்தகர்), அருட்செல்வி ஆகியோரின் அருமை மாமனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மனோன்மணி, சிவபாக்கியம், கற்பகமணி மற்றும் வீராசாமி (ஓய்வுபெற்ற நடத்துனர் இ.போ.ச.), புஸ்பம், அமராவதி, பதஞ்சலிநாதன் (குவைத்), ஆகியோரின் அன்புச் சகோதரரும் தருமராசா, புவனசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2006) முற்பகல் 10 மணிக்கு நயினாதீவு இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம், நயினாதீவு. (55417) தகவல்: நா.தியாகராசா, (மகன்).

### பரமேஸ்வரி இராமநாதன்

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் 32 1/1, பாமன்கடை ஒழுங்கையை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட பரமேஸ்வரி இராமநாதன் 18.11.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - சௌந்தரம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ் சென்ற நாகலிங்கம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமநாதனின் (இளைப்பாறிய ஆசிரியர் - மகாஜனாக் கல்லூரி) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இராமலிங்கம், கனகலிங்கம், நடராசா, அம்பிகைபாகன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் காலஞ்சென்ற வர்களான சிவபாதசுந்தரம், சிவபாக்கியம் மற்றும் நகுலேஸ்வரி, Dr. சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr. குலோத்துங்கன் இளங்கோ (U.S.A), இரவீந்திரநாதன் (U.S.A), Dr. நரேந்திரநாதன் (Austrailia), காலஞ்சென்ற மகேந்திரநாதன் (U.S.A), கஜேந்திரநாதன் (U.S.A), சுபத்திரா விஜயலக்குமி (NORWAY), சுசீலா ஸ்ரீலக்குமி (கொழும்பு), சுகுணா வரதலக்குமி (CANADA) ஆகியோரின் அன்புத் தாயும், சோபிதமணி, விஜயராணி, மன்மதகுமாரி, வாசுகி, முருகேந்திரன் ஆகியோரின் மாமியும் மதிபூஷணன், மதிவதனன், சாருகேசி, திலீபன், குமரன் கோபி, கம்ஷானந்தி, நிமலன் முரளி, கோபி, ஜனகன், போதிமாதவன், வாமனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கிருலப்பனை மயானத்தில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32 1/1 பாமன்கடை வீதி, வெள்ளவத்தை. தொ.பே.: 2366452. (சி-51389) தகவல்: கஜேந்திரநாதன்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26.03.1938 மறைவு 20.10.2006

திருமதி ஞானப்பிரகாசம் கிளாறம்மா

20.10.2006 அன்று மறைந்த எமது அம்மாவின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் திருப்பலிப் பூசையும் இன்று (20.11.2006) மு.ப.11.30 மணிக்கு யாழ். வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் நடைபெறும்.

திருமதி பெயிரி மற்றில்டா (மகள்)
195 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சோமசுந்தரம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 183, குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சோமசுந்தரம் நேற்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற வர்களான சின்னையா - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் ஐயாத்துரை, காலஞ்சென்றவர்களான கந்தையா (பொணிப்பாஸ்), பொன்னம்பலம், பூவிலிங்கம், தருமலிங்கம் மற்றும் மாகிறேற் (பூமணி), இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (20.11.2006) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

183, குருசோவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (55422) தகவல்: சகோதரர்கள்.

### நாகலிங்கம் செல்வரத்தினம்

யாமாச் சந்தி, உடுவில் தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வரத்தினம் நேற்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அமுதம் தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற கந்தையா, சீவரத்தினம் (காலால் திணைக்களம்), இராசலட்சுமி, காலஞ்சென்ற தம்பித்துரை (துறைமுக அதிகார சபை) இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற இராசதுரை, இராசலிங்கம் (ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர்), அன்னபூதி, விக்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20.11.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாமாச்சந்தி, உடுவில். தகவல்: செ.இராசலிங்கம், (மைத்துனர்).

### கந்தசாமி சௌவுந்தரநாயகம்

(ஓய்வுபெற்ற சுங்க இலாகா அதிகாரி)

பருத்தித்துறை, புலோலியை பிறப்பிடமாகவும் சங்கானை நிகரை வீதியை வசிப்பிடமாகவும்கொண்ட கந்தசாமி சௌவுந்தரநாயகம் நேற்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பரத்தினத்தின் அன்புக் கணவரும் சிவகுமாரின் அன்புத் தந்தையும் சிவசுந்தரியின் மாமனும் சாந்தகுமார், ரமேஸ், கிரிதரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2006) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சிவபவனம்' நிகரை வீதி, சங்கானை தகவல்: செள. சிவகுமார் (மகன்)

## மரண அறிவித்தல்கள்

### அருட்தந்தை J.A.கருணாகரர்

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை J.A.கருணாகரர் அடிகளார் நேற்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆயர் இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். அவருடைய அடக்கச்சடங்கு இன்று (20.11.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும்.

யாழ்ப்பாணம். தகவல்: குருமுதல்வர், ஆயர் இல்லம்.

### மைக்கல் யோசப்

டேவிட் றோட்டை பிறப்பிடமாகவும் இல. 5 கண்டி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட வரும் ஓய்வுபெற்ற மருத்துவ அத்தியட்சகருமாகிய மைக்கல் யோசப் 09.11.2006 வியாக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மைக்கல் - அன்னம்மா தம்பதியரின் அன்புமகனும், எலிசபெத்தின் அன்புக்கணவரும், பேணாட் (மலேசியா), எட்வேட் (பிரான்ஸ்), மேரிகாமல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைமகள், சிவசுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும், சுனித், சுஜித், வினித், சுரேகா, பிரேமிலா, சாமலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 10.11.2006 வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து பி.ப.2மணிக்கு அன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 5, கண்டி றோட், யாழ்ப்பாணம். (55411) தகவல்: ஸ் வேட் (மகன்-பிரான்ஸ்).

### குருசுமுத்து டெலோஸ் (சின்னராசா)

ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட டெலோஸ் 17.11.2006 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குருசுமுத்து - பிரகாசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனுவல்பிள்ளை அனந்தாசின் அன்பு மருமகனும், சின்னமணியின் அன்புக் கணவரும், அன்ரன் றோஜின் (ஜேர்மனி) சகோதரனும், சுமித்திரா, சுஜீந்திரன் (குட்போய் தையலகம்), றெமிங்டன் (சீயோன் தேவாலய ஊழியர்), பிரதீபா, அறோஜினி, சுமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜலக்சுமியின் அன்பு மாமனும் சுஜீத் ஜோன்ஸ்சின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (20.11.2006) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஊர்காவற்றுறை சீயோன் தேவாலய சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணகுழி வீதி, ஊர்காவற்றுறை. (55412) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி அந்தோனிப்பிள்ளை ஞானம்மா

நவாலி தெற்கு, சென்பீற்றர்ஸ் தேவாலய வீதியை பிறப்பிடமாகக் கொண்ட, திருமதி அந்தோனிப்பிள்ளை ஞானம்மா 18.11.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சூசைதாசன், மேரிநாயகி (யாழ்.போதனா வைத்தியசாலை), யேசுநாயகி, மேரிஜோசப், ஜெபநேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற வர்களான மரியதாஸ், லூர்த்துநாயகி மற்றும் ஆரோக்கியநாதன், விமல் விக்ரமன், றோசா (லண்டன்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (21.11.2006) முற்பகல் 11 மணிக்கு சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் திருப்பலியின் பின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். பீற்றர்ஸ் தேவாலய வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (55415) தகவல்: குடும்பத்தினர்.

### R.A. வேதநாயகம்



உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட அலேசு பிரகாசம் தம்பதியரின் புதல்வன் R.A வேதநாயகம் 17.11.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானரத்தினத்தின் அன்புக் கணவரும், V.X. புஸ்பராசா (லண்டன்), புஸ்பலதா (ஆசிரியர் - R.C -ஆனைக் கோட்டை), யூடின் புஷ்பநாயகம் (லண்டன்), புஷ்பமாலா (ஆசிரியர், விவேகானந்தாக் கல்லூரி, திருகோண மலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (லண்டன்), ராஜன் ஆகியோரின் மாமனும், போல் பிரியன், அன்றூ டிலான் ஆகியோரின் பேரனும் அமரர்களான நல்லம்மா சிங்கராயர், நேசம்மா அடைக்கலமுத்து, மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் S.A குணரத்தினம், திருமதி திரேசம்மா செல்வநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18.11.2006 சனிக்கிழமை அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுவ-ஞானபதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை. (55416) தகவல்: புஷ்பலதா, (மகள்-ஆசிரியர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி இணைப்பு வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

## பிரதிப் பொதுமுகாமையாளர் தகவல்

அச்சுவேலி, நவ.20

யாழ்.மாவட்டத்தில் புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தற்சமயம் சேவையில் உள்ள தொலைபேசி இணைப்புக்களை இயல்புநிலையில் பராமரிப்பதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தொலைபேசி வாடிக்கையாளர்கள் எம்முடன் ஒத்துழைக்கவேண்டும்.

ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய பிரதிப்பொதுமுகாமையாளர் வி.யோகேந்திரன் இதனை உதயனுக்குத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.மாவட்டத்திற்குரிய தொலைபேசி இணைப்புக்களை உரிய முறையில் சீர்செய்வதற்குரிய உபகரணங்கள் மற்றும் கருவிகளைக் கொழும்பில் இருந்து இப்போது பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள் ளது. இதனால் புதிய இணைப்புகள் வழங்கு வது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தொலைபேசி இணைப்புகளில் ஏற்படும் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு உதிரிப்பாகங்கள் இல்லாமையால் இருக்கின்றவற்றை சீர்செய்தே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**வாடகை விலக்கு**

ஓகஸ்ட் மாதம் முற்றாக சீர்குலைந்த 5 ஆம் 6ஆம் இலக்கத்தொடர் தொலைபேசி இணைப்புகள் சீர்படுத்தப்பட்டு தற்பொழுது வழமை நிலையில் செயற்பட்டு வருகின்றன.

அவற்றுக்கான வாடகை ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கு அறவீடு செய்யப்படாமல் விலக்களிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் வேலைகள் அசாதாரண சூழ்நிலையால் தடைப்பட்டிருப்பதோடு, எதிர்பார்த்த இலக்குக்கு ஏற்ப வலிகாமம் பகுதியில் மேலதிக இணைப்புக்களையும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது - என்றார் அவர். (1-203-11)

## மாதகலில் கடை உடைத்துத்திருட்டு

வலி.தென்மேற்கு,நவ.20

மாதகல் பிரதான வீதியில் உள்ள பலசரக்கு கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள்திருடப்பட்டுள்ளன என்று கடை உரிமையாளர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அங்கிருந்து சவர்காரம், ரயர், ரியூப், பற்ரறி உட்பட பலபொருள்கள் திருட்டுப் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

கடையின் முன்பக்க கதவை உடைத்து உட்புகுந்தே திருடர்களால் பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-135)

## மண்எண்ணெய் பாவனை அதிகரிப்பு ஆனால் சந்தையில் போதியளவு இல்லை

யாழ்ப்பாணம், நவ.20

குடாநாட்டில் மண்எண்ணெய் பாவனை அதிகரித்துள்ள போதிலும் சந்தையில் போதியளவு மண்எண்ணெய் இல்லை. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டில் தற்போது எரிவாயு பயன்பாடு முற்றாக இல்லாமல் போயுள்ளது. இதன் காரணமாக பெருமளவிலான மக்கள் மண்எண்ணெய் அடுப்பையே நம்பியுள்ளனர்.

இதேவேளை- மின்சாரமும் சீரற்றுக் காணப்படுவதாலும் விறகுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் மண்எண்ணெய்ப் பாவனை குடாநாட்டு மக்களிடையே அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில் மண்எண்ணெய்க்குத் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் ஒரு லீற்றர் மண்எண்ணெய் ரூபா 200 வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பெரும்பாலான கடைகளில் மண்எண்ணெயைப் பெறுவது பெரும்பாடாகவுள்ளது என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- ஒரு லீற்றர் பெற்றோல் கள்ளச்சந்தையில் 600 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (1-203-79)

**கட்டுப்பாட்டு விலைக்கு பொருள்கள் கிடைத்தும்**

## உணவகங்களில் பண்டங்களின் விலை ஏற்றம் என முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்.குடாநாட்டில் உள்ள தேநீர் சாலைகள், உணவகங்களில் விற்பனை செய்யப்படும் பண்டங்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

உணவகங்கள் மற்றும் தேநீர்சாலைகளுக்கு வேண்டிய பொருள்கள் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியன மூலம் பங்கீட்டு முறையின் கீழ் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு பொருள்களைப் பெற்ற கடை உரிமையாளர்கள் ஒரு சிலர் தவிர்ந்த ஏனையோர் கூடிய விலைக்கே உணவுப் பண்டங்களை விற்பனை செய்து வருவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

கட்டுப்பாட்டு விலைக்குப் பொருள்களைப் பெற்று கூடிய விலையில் பண்டங்களை விற்பளை செய்வதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் பொது மக்கள் வேண்டுகின்றார்கள். (1-68)

## வலிகாமத்தில் மீண்டும் பாதீனியம்

யாழ்ப்பாணம், நவ. 20

வலிகாமம் பிரதேசத்தில் மீண்டும் பாதீனியம் வளரத் தொடங்கியுள்ளது. கடந்த காலங்களில் அதிகளவு காணப்பட்ட இச்செடியின் பரவல் பின்னர் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது மருதனார்மடம் முதல் தெல்லிப்பழை வரையான காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம் வீதி மற்றும் அச்செழு, ஊரெழு, வட்டுக்கோட்டை, இராசவீதி, புன்னாலைக் கட்டுவன், நிலாவரை போன்றபகுதிகளில் மீண்டும் பாதீனியம் அடர்த்தியாக வளரத் தொடங்கியுள்ளது. இச்செடி ஏனைய பயிர்கள் செழிப்பாக வளர்வதைத் தடை செய்வதுடன் ஒரு வகை நச்சுத்தன்மை கொண்ட செடி என்பதும் தெரிந்ததே (1-203-68)

## குடாநாட்டில் உணவுப் பாதுகாப்புத் திட்டம்; புனர்வாழ்வு நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது

யாழ்ப்பாணம், நவ.20

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உணவுப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாக அதன் திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டு விவசாயிகளிடையே நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் கடன் திட்டமும் மானியத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் படி நெல் உற்பத்திக்காக 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படும்.

அது மட்டுமன்றி மீளளிக்கப்பட வேண்டிய கடன்தொகை நெல் அறுவடையின் பின் நெல்லாகவே மீளப் பெறப்படும்.

இதன் முதற்கட்டமாக நாவற்குழி தெற்கு, வேலம்பிராய், கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு, கைதடி போன்ற பிரதேசங்களில் இருந்து 217 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை-

வறிய குடும்பங்களில் இருந்து இனங்காணப்பட்ட இந்த பயனாளிகளுக்கு உழவு கூலி, விதைநெல் மற்றும் உர வகை என்பவற்றிற்காக ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 12 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் எனவும் -

இந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம் எதிர்வரும் காலங்களில் யாழ்.குடாநாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் எனவும்- அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (1-79)

## யாழ்.பல்கலையை மீள ஆரம்பிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

### சமூக நலத்துறை அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்.பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகளைச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகிறார் என அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- யாழ்.பல்கலைக்கழக சமூகம், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை அடுத்து இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக யாழ்.பல்கலைக் கழக மூதவையினர், பேரவையினர், பதில்துணைவேந்தர், அரசஅதிபர், படை அதிகாரிகள் உட்பட அனைத் துத் தரப்பினருடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேச்சுகளை நடத்தி வருகின்றார் - என்றுள்ளது. (203)


BMICH இல் பட்டம் பெற்றவரை மனதார வாழ்த்துகின்றோம்

வேலணை பிரதேச சபை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நிதி)
அராலியூர்
திரு. பூர்வீகநாதன் சசிகரன்
(Dip.in.phy.Education-University of Jaffna)
அவர்கள் 08.11.2006 அன்று கொழும்பு BMICH இல் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினைப் பெற்றுள்ளமையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரதேச சபை,
வேலணை.
(55279)

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.


## வழுக்கையாற்றில் மீன் பிடிப்பதில் ஆர்வம்

நவாலி, நவ.20

வழுக்கையாற்றுப் பாலத்தில் மீன் பிடிப்பத்தில் தற்போது பலரும் ஆர்வம் காட்டி வருவதைக் காண முடிகின்றது.

தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வழுக்கையாற்றின் ஊடாக வெள்ளம் கரைபுரண்டோடி கல்லுண்டாய் கடலுடன் கலப்பதுடன் அதன் நீர் மட்டமும் உயர்ந்து காணப்படுகின்றது.

இதனால் கடல் மீன் இந்த ஆற்றைத் தேடி வருவதனால் பலர் தூண்டில், வலை என்பவற்றின் உதவியுடன் இவற்றைப் பிடித்துச் செல்கின்றனர். (1-100)


ஸ்ரீ சோமஸ்கந்த அன்னையின் நல்வாழ்த்துகள்

கனடா மார்க்கம் நகர சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாகை சூடிய எமது கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளைத் தலைவர்
திரு.லோகன் கணபதி
அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.
(55340)
ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர். பவளவிழாச் சபை.



உடனடி வேலை வாய்ப்பு

டோகா,கட்டார், டுபாய் துப்புரவுத் தொழிலாளர்கள்
(Cleaning Laborer)
(விமான நிலையம், சுப்பமாக்கட், ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில்)
★ முன்னனுபவம், அனுபவம் தேவையில்லை.
ஒரு மாதத்தில் பயணம்.

யாழ்.கொழும்பு விமான ரிக்கற்றுக்கள்

கொழும்பு - யாழ்., யாழ். - கொழும்பு
விமான ரிக்கற்றுக்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :- RAINBOW TRAVELS & TOURS
32,1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே :- 222 3237
011 5371629 கொழும்பு
0777 535988 கொழும்பு
c/51378


## மரக்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.20

'சொண்ட்' அரசசார்பற்ற நிறுவனம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மரக்கன்றுகளை விநியோகம் செய்து வருகின்றது.

பாடசாலைகள்,கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள்,பொது இடங்கள் என்பனவற்றில் நடுவதற்கு தேக்கு, சமண்டலை, மலைவேம்பு, சவுக்கு போன்ற மரக்கன்றுகளை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் கிராமமட்ட அமைப்புகளின் பயனாளிகளுக்கு தேசி, பலா, கொய்யா, [illegible] வழங்கி வருகின்றனர். (203)


கேள்வி அறிவித்தல்
சுகாதார போசணை அமைச்சு
சுத்திகரிப்புச் சேவையளித்தல் தொடர்பானது

போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் சுத்திகரிப்புச் சேவையை 2007/2008 வருடங்களுக்கு நடத்துவதற்குப் பின்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) கேள்விப்பத்திரங்கள் 07.12.2006 மு.ப 10 மணிக்கு முன்பு தலைவர், திணைக்கள ரென்ரர் சபை, சுகாதார போசணை அமைச்சு, சுவசிரிபாய, இல. 385, பத்தேகம, விமலவன்ச மாவத்தை, கொழும்பு-10 இற்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.
2) பதிவு உறுதிச்சீட்டின் மூலப்பிரதியும், உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதியும்
3) மீளளிக்கப்படாத 2000/- ரூபாவுக்கான பற்றுச்சீட்டு.
4) சுத்திகரிப்புச் சேவைக்குப் பிரதேச செயலாளரிடம் பெறப்பட்ட ரூபா 5,00,000/- பெறுமதிக்கான உறுதிச்சீட்டு.
5) கேள்விப்பத்திரம் திறக்கும்போது கேள்வியாளர் அல்லது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.
6) மேலதிக விவரங்களையும் கேள்விப்பத்திரங்களையும் 30.11.2006 இற்கு முன்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அ.ஈ.ஞானஜோதி,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
(சி/51376)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை இசை ஆசிரியை
திருமதி ம.மனோராஜி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி புவனேஸ்வரி இராமநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம்,
யாழ்.கல்வி வலயம்.

(53401)

## கண்ணீர் அஞ்சலி

எமது முகாமைத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.நித்தியலட்சுமி அவர்களின் அன்புச் சகோதரர்

**சண்முகம் இரத்தினசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர்களும், ஊழியர்களும்.

(53818)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19
01
1937

மறைவு
11
12
2004

**அமரர் கோவிந்தர் கணபதிப்பிள்ளை**

(சிரார்த்த நாள் : 20.11.2006)

வருடமது இரண்டிங்கு மறைந்தாலும் எமதுயிரே
மனத்திரையில் எதுபொழுதும் நிழலாகக் காணுகின்றோம்
அருமையுங்கள் பெரும்பாசம் ஆராலும் தரவொண்ணா
அமரருலகிருந்து ஆறுதலைத் தாரும் ஐயா!

குஞ்சர் கடையடி,
கோணந்தோட்டம்,
கரணவாய், கரவெட்டி.

அமரரின் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(55195)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

832 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம்

**01 47 49 54**

**17-11-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 5542611 - 5556584

ஜக்பொட் பரிசு ரூபா.4,413,250/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 304,372 | 10/- | 3,043,720/- |
| 2 இலக்கங்கள் | 27,962 | 20/- | 559,240/- |
| 1 இல. + லக்கினம் | 27,577 | 30/- | 827,310/- |
| 2 இல. + லக்கினம் | 2,501 | 100/- | 250,100/- |
| 3 இலக்கங்கள் | 755 | 500/- | 377,500/- |
| 3 இல. + லக்கினம் | 66 | 5,000/- | 330,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,413,250/- | - |
| மொத்தம் | | | 5,887,870/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 363,243 | | 6,911,370/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,092,850/-

தொடர் இல.4669216 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 நவெம்பர் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புகளுக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
35, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

* தயவுசெய்து அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5552395-1-74 |
| கொழும்பு | 5548905-4-98 |
| கொழும்பு | 5555597-0-36 |
| கம்பஹா | 5553615-5-69 |
| புதுளை | 5546376-3-11 |

## ஆங்கில ஆசிரியர் பயிற்சி 23ஆம் திகதி ஆரம்பம்

அச்சுவேலி, நவ.20

ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறிகள் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

பலாலி ஆசிரிய கலாசாலை, அட்டாளைச் சேனை ஆசிரிய கலாசாலை, களுத்துறை ஆசிரிய கலாசாலை, மகரகம ஆசிரிய கலாசாலை ஆகிய நான்கு இடங்களில் ஆங்கில ஆசிரிய பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த 14ஆம் திகதி பயிற்சிநெறியை ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்திருந்த போதிலும் -

விரிவுரையாளர்களுக்கு பயிற்சிநெறி தொடர்பான வழிப்படுத்தல்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்களால் பயிற்சியை குறிப்பிட்ட திகதியில் ஆரம்பிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.(203-11)

## கண்ணீர் அஞ்சலி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல சட்டத்தரணியும், எம் மண்ணின் மைந்தனும், எமது நிலையத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டி ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கியவருமாகிய

**அமரர் நடராஜா ரவிராஜ்**

அவர்களின் திடீர் மறைவால் துயறுற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சரசாலை மத்திய சனசமூக நிலையமும், சரசாலை மத்தி வாழ் மக்களும்.

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை விற்பனை உதவியாளர்
நா.வைகுந்தா அவர்களின் அன்புத் தாய்

**திருமதி நாகேந்திரா மனோன்மணி**

[நவாலி வடக்கு, மானிப்பாய்]

அவர்கள் 17.11.2006இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர், (சி/51384)
சிக்கன சேமிப்புக் கடனுதவுச் சங்கம்,
ப.நோ.கூ. சங்கம், சங்கானை

University of Jaffna
**Museum, Faculty of Arts**
**Collecting Antiquities and Objects of National Heritage**

As part of a project to expand the National Heritage Museum at the Faculty of Arts, University of Jaffna, the Dean, of the Faculty of Arts is engaged in the collection c antiquities and objects of National Heritage from the public, well-wishers and antiquarians who are unable to maintain such antiquities in their possession.

The antiquities could be given to the museum either as a gift or on loan. The Faculty will also consider purchasing valuable antiquities.

Well - wishers and the public, who wish to donate, lend or sell antiquities and objects of National Heritage are kindly requested to write to the Senior Assistant Registrar, Faculty of Arts, University of Jaffna giving the details of the antiquities in their possession, and their contact address and Telephone number.

Registrar,
University of Jaffna.

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்

மண்ணில்
21
11
1944

விண்ணில்
11
12
2004

**பூ.சந்திரமௌலீசன்**

(ஓய்வு பெற்ற நீதிமன்ற ஊழியர், சாவகச்சேரி)

ஆண்டுகள் இரண்டு ஆனது ஆறிடுமோ எம் துயரம்
நீண்ட சோகம் நிலைத்துவிட்டது
வாழ்ந்த காலம் வளம்பெறச் செய்தீர்
அப்பா என்று அழைக்க தப்பாமல் கடமைகள் செய்தீர்கள்
எக்காலும் அழியாச் செல்வத்தை ஊட்ட உற்சாகம் தந்தீர்கள்
பட்டம் பெற்றோம் பார்க்கப் பக்கத்திலில்லை.
பாவிகள் பதைபதைக்கின்றோம். கண்ணீர்ப்பூக்களை காலடியில்
காணிக்கையாக வைக்கின்றோம்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(55188)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
03
12
1971

உதிர்வு
01
12
2005

**அமரர் குணரத்தினம் கிருஷ்ணகுமார் (குமார்)**

திதி : கார்த்திகை அமாவாசை (20.11.2006)

ஆண்டொன்று ஆனதோ - உம்
ஆருயிர் பிரிந்து சென்று
எம் விழிகளில் கண்ணீர் மல்க - ஒரு நொடியில்
எங்கே சென்றீர் எம்மை விட்டு?

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

உம்பிரிவால் துயருறும்,
தாய், சகோதரர்கள், உறவினர்கள்.

(55326)

## 45ஆம் நாள் நினைவலைகளில்

தோற்றம்
29
★
11
★
1938

மறைவு
07
★
10
★
2006

**அமரர் கதிர்காமத்தம்பி நாகராசா**

(ஒய்வு பெற்ற அதிபர், யா/மகாஜனக்கல்லூரி,
02.12.1985 இலிருந்து 28.11.1998 வரை)

உருவத்தால் உயர்ந்தோன் நீ உத்தமராய் வாழ்ந்திருந்தீர்
ஊருலகம் உவந்தேற்க உயர்கல்வித் தரம் கூறுந்தீர்
வருடங்கள் பதின்மூன்றாய் மகாஜனனை உயர்த்தி வைத்தீர்
வாண்மையொடு நேர்மையெனும் அணிகூறந்து சேவை செய்தீர்
இடம்பெயர்ந்த வேளையிலே இடர்ப்பாடு பல களைந்தீர்
இனியவராய் உலவியதால் எம்மனதில் ஆட்சி செய்தீர்
எவர்மனதும் நோகடிக்கா இனியபண்பால் உயர்ந்து நின்றீர்
ஏற்றமிகு விண்ணுலகில் இனி உறங்கி அமைதிகொள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிவகாமி அம்மை பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சந்தி! சாந்தி! சாந்தி!

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

ஆசிரியர் கழகம்.

(55291)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
22
09
1925

மறைவு
01
12
2005

**அமரர் இராமசாமி உருத்திரா B.Sc. (London)**

(J.P.U.M, Senior Advocate, பருத்தித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் பேரவை உறுப்பினர்)

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து
சிறப்போடு எம்மை வாழவைத்தீர்கள் - சமூகமே
வாழ்வு என்று நல்வாழ்வு வாழ்ந்தீர்கள் - எம்மை விட்டுப்
பிரிந்து ஆண்டொன்று மறைந்தோடிச் சென்றாலும் உங்கள்
திருவுருவம் எங்கள் மனதை விட்டு நீங்கவில்லை!
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம்பெருமானை
இறைஞ்சுகின்றோம்.

வி.மு.வீதி,
ஆத்தியடி,
பருத்தித்துறை.

திருமதி. மகேஸ்வரி உருத்திரா
[மனைவி]

(ச/51387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் இரட்டை வேட இராஜதந்திரம்

'பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது' என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை நிலைவரம் தொடர்பாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவுக்கு அனுப்பிய கடிதத்தைப் பார்க்கும்போது அத்த கைய எண்ணம்தான் எழுகின்றது.

அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லும் தந்திரங்களைக் கையாள்வதை விட்டு, தமிழ் மக்களின் உண்மையானதும், சட்டபூர்வமானதுமான உரிமைகளைப் பேச்சு மூலம் வழங்கி, அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்று இலங்கை அரசிடம் இந்தியா வற்புறுத்த உள்ளது என அக்கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருக்கின்றார்.

எதைக் கைவிட வேண்டும் என இலங்கையை இந்தியா வற் புறுத்தப் போகின்றது எனப் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிடு கின்றாரோ, அதே விடயத்தை மென்மேலும் இலங்கை தீவிரமா கப் புரிவதற்கு - செய்வதற்கு - முழு அளவில் உதவிக் கொண்டு தான் அதைச் செய்ய வேண்டாம் என இலங்கையைக் கோரப் போகின்றதாம் இந்தியா! மிகமிக வேடிக்கையான விடயம் இது.

இலங்கையில் அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய் யும் இலங்கைத் தரப்பின் மார்க்கங்களில் பிரதானமான ஒன்று விமானக்குண்டு வீச்சு. கண் மண் தெரியாமல் - எழுந்த மானத் தில் - வானவழித் தாக்குதல்களைத் தமிழர் தாயகத்தில் மேற் கொள்ளும் இலங்கை விமானப்படையின் கொடூரத்தால் எழும் பேரழிவின் - பேரவலத்தின் - தாக்கம், பாரத தேசத்திலும் அவ் வப்போது பிரதிபலிக்கத் தவறுவதில்லை. செஞ்சோலை மாண வர் படுகொலைப் பயங்கரம், கிளிநொச்சி வைத்தியசாலைக் கொடூரம் என்று அண்மைக் காலத்தில் இந்தக் கொடூரங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை உள்ளங்கை நெல்லிக்கனி. இந்தியத் தரப்புக்கும் - இது நன்கு தெரியும்.

இத்தகைய யுத்தத் தந்திரத்தை - தமிழர்களைக் - கொல்லும் மார்க்கத்தை - கொண்டிருக்கும் இலங்கைத் தரப்புக்கு, அதற்கு உதவும் வகையில் செயற்படவே வேண்டாம் என்றுதான் வைகோ வும் ஏனைய தமிழக அரசியல் தலைவர்களும் இந்திய மத்திய அரசுக்கு வற்புறுத்தல் கொடுத்து வருகின்றார்கள்.

இலங்கை விமானப்படையினருக்குப் பஞ்சாப்பில் தொழில் நுட்பப் பயிற்சிகளை இந்தியா வழங்குவது ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்யும் இலங்கை அரசின் வானவழித் தாக்குதல் தந்திரோபாயத்துக்கு நேரடியாக உதவி வழங்கும் நடவடிக்கை என்பது கண்கூடு.

அதைச் சுட்டிக்காட்டி - ஈழத் தமிழர்களுக்கு எதிரான அந்தக் கொடூரத்துக்குத் துணை போவதைத் தடுத்து நிறுத்தும்படியே - வைகோ கோரி வருகின்றார். ஆனால், அக்கோரத்துக்கு - கொடூரத் துக்கு - துணை போகும் தனது செயலை நிறுத்தாமல், அதற் குப் பதிலாகத் தொடர்ந்து செய்து கொண்டு, இலங்கைத் தரப் பின் நடவடிக்கையைக் கைவிடுமாறு கோரப்போகின்றதாம் இந்தியத் தலைமை.....!

ஒருபுறம் - ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்யும் விமா னக் குண்டு மார்க்கத்துக்குத் தொழில்நுட்ப உதவி.

மறுபுறம் - ஈழத் தமிழ்ப் பொதுமக்களைப் படுகொலை செய்யும் தந்திரங்களைக் கைவிட்டு, அந்த மக்களுக்கு உரிய உண்மையான - சட்டபூர்வமான உரிமைகளைப் பேச்சு மூலம் வழங்கி அரசியல் தீர்வு காண வலியுறுத்தல்.

இதுதான் பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும் புதுடில்லியின் இராஜதந்திரம்.

அயலில் உள்ள வல்லாதிக்க நாடு என்று மதிக்கப்படும் நமது பாரத தேசம், இத்தகைய இரட்டை வேட இராஜதந்திரத்தை இலங்கை விடயத்தில் கையாண்டதன் விளைவே இத்தீவின் ரண கள நிலைமைக்கு மூலகாரணம்.

ஒரு பக்கம் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைத் 'தாஜா' செய்து கொண்டு, மறுபுறம் ஈழத் தமிழர்களின் காதில் பூச்சுற்று வதற்கு எண்பதுகளின் பிற்பகுதியில் இந்தியத் தலைமை எடுத்த பிராந்திய மேலாதிக்கத் திமிருடன் கூடிய இராஜதந்திர நடவடிக்கை முழு அளவில் தோற்று, கையைச் சுட்டுக் கொண்டு, பெரும் அவமானத்துடன் இலங்கை விவகாரத்திலிருந்து விலக வேண்டிய விளைவை இந்தியாவுக்கு ஏற்படுத்தியது. அதன் காரணமாக சுமார் பதினைந்து ஆண்டு காலம் இலங்கை விவகா ரப் பக்கம் தலைவைக்கவே விரும்பாமல் ஒதுங்கியிருக்க வேண் டிய கட்டாயமும் இந்தியாவுக்கு நேர்ந்தது.

ஆனால், அந்தப் பட்டறிவிலிருந்து அது இன்னும் பாடம் படித்ததாக இல்லை.

மீண்டும் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட் டும் தனது இராஜதந்திரத்தை அது தொடர்கின்றது.

ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு மறைமுகமாக ஆயுத உதவி கள், போராட்டப் பயிற்சிகள் என்பவற்றை வழங்கி அவர்களது விடுதலைப் போராட்டத்தை முழு அளவில் ஊக்குவித்துத் தூண்டி விட்டுவிட்டு, பின்னர் அவர்களது தாயகத்தைத் தானே ஆக்கிர மித்து அந்தப் போராட்டத்தை அடக்குவதற்குத் தனது படை களை ஏவிவிட்டமை போலவே -

இப்போது இலங்கை விமானப்படையினர், தமிழ் மக்கள் மீது விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்துவதற்கு உதவும் வகையில் அந்தப் படைக்கு தொழில்நுட்பப் பயிற்சி உதவி களை நேரடியாகவே வழங்கிக் கொண்டு, மறுபுறத்தில் ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்யும் தந்திரங்களைக் கைவிடு மாறு இலங்கையை வற்புறுத்தப் போகின்றதாம் இந்தியத் தலைமை.

இந்த இரட்டை வேட இராஜதந்திர அணுகுமுறையிலிருந்து எப்போதுதான் மாறப் போகின்றது புதுடில்லி?

இலங்கைத் தலைமையின் கொடூரப் போக்கால் பாதிக்கப் பட்டு பேரவலத்தில் சிக்கியிருக்கும் ஈழத் தமிழர்களின் நிலை கண்டு பாரதத்தில் - குறிப்பாக - தமிழகத்தில் உணர்ச்சி அலை களும், உரிமைக் குரல்களும் பீறிட்டு எழுகின்றன. அவற்றைச் சமாளிப்பதற்காக ஒரு பக்கத்தில் முதலைக் கண்ணீர் வடிக்கும் விதமாக அறிவிப்புகளை புதுடில்லி விடுக்கின்றது. ம.தி.மு.க. தலைவர் வைகோவுக்கு இந்தியப் பிரதமர் எழுதிய பதில் கடிதத் தின் உள்ளடக்கமும், அது பகிரங்கப்படுத்தப்பட்ட விதமும் அந் நோக்கத்தைத் தான் கொண்டவை.

அதேசமயம், ஈழத் தமிழர்களின் போராட்ட வலுவை - உரி மைக் குரலை - அடக்கும் தனது உள்ளார்ந்த அவாவை நிறை வேற்றிக் கொள்வதற்காக, அந்த முயற்சியில் முழு மூச்சாக ஈடு பட்டிருக்கும் இலங்கைக்கும், இந்தியா உதவுகின்றது.

புதுடில்லி அரசுத் தலைமையின் இந்த இரட்டை வேட இராஜதந்திரத்தை இந்திய மக்களும், ஏனைய அரசியல் தலை வர்களும் புரிந்துகொள்ள வேண்டும். இப்போக்கிலிருந்து புது டில்லித் தலைமை விலகி - விடுபட்டு - ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் விதத்தில் நீதியுடன் செயற்படுவதற்கு அத னைத் தூண்டவும், வழிப்படுத்தவும் அவர்கள் முன்வர வேண்டும்.

அதை விடுத்து, தனது இரட்டை வேட இராஜதந்திர அணுகு முறையை இலங்கை விவகாரத்தில் புதுடில்லி தொடர்வதற்கு இடமளிப்பது இலங்கைத் தீவில் நிலைமையை இன்னும் மோச மாக்கவே உதவும்.

# யாழ்.பல்கலைக்கழகத்தை மீளத் திறக்க டக்ளஸ் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவதற்குக் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.20

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் யாழ். வருகை யினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியமும் கலைப் பீட மாணவர் ஒன்றியமும் தனித்தனியாகக் கண்டித்துள்ளன.

யாழ்.குடாநாட்டு மக்கள் மீது பெரும் மனித அவலத்தினை உருவாக்கி, குழம் பிய குட்டையில் மீன் பிடிப்பது போல அமைச்சரின் யாழ். வருகை அமைந்திருக்கிறது.

பெரும் அவலத்திற்குள் சிக்குண்டு தத்தளித்துக்கொண்டிருக்கும் குடாநாட்டு மக்கள் மத்தியில் போலி அரசியல் நடத்தி லாபம் தேட முனைகின்றனர் ஈ.பி.டி.பியினர்.

அரசாங்கத்தினால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு எவ்வித கற்றல் செயற்பாடுகளும் இன்றி மூடப்பட்டிருக்கிறது. யாழ். பல்கலைக்கழகம் அதே அரசாங்கத்துடன் சேர்ந்து நின்று கொண்டு, பல்கலைக்கழகத்தினை மீளத் திறப்பதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவது எமக்கு வேதனையாக இருப்பதோடு இது ஓர் அரசியல் உள் நோக்கம் கொண்டதுமாகும் - இவ்வாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

### விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்

ஏ-9 பாதை மூடப்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டு, தமிழ் மக்கள் மீது அடக்குமுறை கட்ட விழ்த்துவிடப்படுவதற்கு அரசாங்கத் துக்குத் துணையாக நின்ற அமைச்சரின் யாழ்.விஜயம் ஒரு கண்துடைப்பும் போலி அரசியலுமாகும் -

கடந்த மூன்று மாதங்களில் பல் கலைக்கழக மாணவர் ஒருவர், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒருவர் மற் றும் பாடசாலை மாணவர்கள் கொடூர மான முறையில் கொலை செய்யப்பட் டுள்ளனர். வவுனியாவில் விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஐவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் கல்விச் சமூகம் பீதியில் உறைந்துள்ளது -

அரசாங்கத்தினால் திட்டமிட்டு நடத்தப்படும் செயற்பாட்டினால் யாழ். பல்கலைக்கழகத்தில் எந்த ஒரு கல்விச் செயற்பாடும் நடைபெறவில்லை. இத் தகைய செயற்பாடுகளுக்கு உடந்தை யாக இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, யாழ்.பல்கலைக்கழகத்தை திறக்க நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூறு வது பெரும் கேலித்தன மானதாகும் -

இவ்வாறு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருக்கிறது. (அ)

# தமிழ் மாணவர் கொலை செய்யப்படுவது அவர்களை விரக்திக்கு ஆளாக்கியுள்ளது

## வவுனியா மாணவர் கொலை குறித்து ஒன்றியம்

யாழ்ப்பாணம்,நவ.20

தமிழ் மாணவர்களைக் கொலை செய்வதை உடனடியாக நிறுத்துமாறு யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றி யம் கோரியுள்ளது.

ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை யில்-

வவுனியாவில் விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஐந்து பேர் படையினரால் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொல்லப் பட்டதாகவும், குடாநாட்டிலும் மாண வர்கள் சுட்டுக்கொல்லப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடக்கு முறைக்காக அரசு கையா ளும் உத்தியாகவே மாணவர் மீதான படுகொலைகளை நாம் பார்க்கின்றோம். அடுத்தடுத்து மாணவர்களை கொலை செய்வதை அரசு நிறுத்தவேண்டும்.

சிரமதானப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவி மாணவர் களை நிற்க விட்டு அவர்கள் மீது சர மாரியாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து கொல்லப்பட்டிருப்பதை, சர்வ தேசம் மௌனம் காக்காது, கண்டிக்க வேண்டும். தடுத்துநிறுத்த முன்வரவேண் டும். மாணவர்கள் மீதான அடக்கு முறை நிறுத்தப்படாது தொடர்ந்து கொண்டி ருப்பது ஒட்டு மொத்த மாணவர்களை யும் விரக்திக்கு உள்ளாக்கியிருக்கின் றது என்றும் அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

# சுமுக நிலையை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள்

## சமூக சேவைகள் அமைச்சு அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.20

குடாநாட்டில் சுமுக நிலையை ஏற் படுத்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சு வெளி யிட்ட செய்திக் குறிப்புகளில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்புக்களில் தெரி விக்கப்பட்டுள்ள பிரதான விடயங்கள் வருமாறு-

* குடாநாட்டில் கல்வி நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்ற மாண வர்களின் நன்மை கருதி பல்வேறு நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
* வேம்படி வீதியை மாணவர்களின் நலன் கருதி பிற்பகல் 1.45 மணி முதல் 2.45 மணிவரை வாகனப் போக்கு வரத்துக்கு மூடிவைக்க அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத் துள்ளார்.
* குடாநாட்டில் மின் விநியோகத் தைச் சீராக்கும் பொருட்டு 24 மணி நேர மும் மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடனடியாக நேற்றுமுன்தினம் முதல் இரவு 12 மணி வரை மின்சார விநியோகம் மேற் கொள்ளப்படுகின்றது.
* குடாநாட்டில் உள்ள பேக்கரி களின் உற்பத்திகள் மக்களுக்கு இலகு வாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இந்தப் பொருள்கள் சகல ருக்கும் கிடைக்க வசதி செய்யப்படும்.

(அ-1)

# குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் நிவாரண விநியோகம் ஆரம்பம்

குடாநாட்டில் கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான செப்ரெம்பர் மாதத் திற்குரிய நிவாரண விநியோகம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

ஓர் அங்கத்தவருக்கு 4 கிலோ 780 கிராம் அரிசியும் 3 கிலோ மா, 300 கிராம் பருப்பு வீதமும் -

இரண்டு அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு 8 கிலோ 100 கிராம் அரிசி, ஆறரைக் கிலோ மா,300 கிராம் பருப்பு வீதமும் -

மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு 10 கிலோ 740 கிராம் அரிசி, 9 கிலோ மா, அரைக் கிலோ பருப்பு வீதமும் -

நான்கு அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு 12 கிலோ 840 கிராம் அரிசி, 11 கிலோ மா, அரைக் கிலோ பருப்பு வீதமும் -

ஐந்து அங்கத்தவர் கொண்ட குடும் பங்களுக்கு 15 கிலோ 120 கிராம் அரிசி, 14 கிலோ மா, ஒரு கிலோ பருப்பு வீத மும் - விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை - யாழ்ப்பாணத்தில் இந்த விநியோகம் இன்னும் ஆரம்பிக் கப்படவில்லை.

சங்கங்களுக்குரிய விநியோகம் இன் னும் இடம்பெறவில்லை எனவும் -

அரச அதிபரால் வழங்கப்பட்ட பொருள்களின் மிகுதி இருப்புக் கிடைக்கப்பெற்று சங்கங்களுக்கு விநி யோகம் செய்யப்பட்ட பின்னரே நிவா ரணத்துக்குரிய விநியோகம் இடம் பெறு மென்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-111)

## தபால்கள் இன்று விநியோகம்

நல்லூர்,நவ.20

திருகோணமலையில் இருந்து நேற்று முன்தினம் கப்பல் மூலம் எடுத்துவரப் பட்ட தபால் பொதிகள் எவ்விதமான சேதமும் இன்றி யாழ்.தபால் நிலையத் துக்கு வந்துசேர்ந்துள்ளன என்று தபா லக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கப்பல் மூலம் 230 தபால் பொதி கள் எடுத்துவரப்பட்டுள்ளன. இவை எந்தவித பாதிப்புமின்றி வந்துசேர்ந் துள்ளன.

இன்று திங்கட்கிழமை முதல் தபால் களை விநியோகம் செய்வதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (1-203-111)

## ஆவரங்காலில் குடும்பஸ்தர் படுகொலை

யாழ்ப்பாணம்,நவ.20

ஆவரங்காலில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குடும்பஸ் தர் ஒருவர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ண ராஜா செந்தில்ராஜா (வயது 33) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

ஆவரங்கால் பகுதியில் உள்ள ஆலை ஒன்றில் வேலை செய்யும் இவர் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த சம யம் இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரை வழிமறித்துச் சுட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் அச்சுவேலி ஆஸ் பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (1)

# வழிபாடுகளுக்கு வேண்டிய பொருள்களை மக்கள் தேவைக்கேற்ப பெற உதவுக!

## நல்லை ஆதீனமுதல்வர் அதிகாரிகளிடம் வேண்டுகோள்

நல்லூர்,நவ.20

கார்த்திகைத் தீபத் திருநாளை முன் னிட்டுப் பூசை வழிபாடுகளுக்குத் தேவையான அரிசி, சக்கரை, பயறு, தேங்காய் எண்ணெய் போன்ற பொருள் களை மக்கள் தேவைக்கேற்றவாறு போதிய அளவு பெற்றுக்கொள்ளக்கூடி யவாறு உயரதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவா மிகள் உயரதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி திங் கட்கிழமை தீபத்திருநாளாகும். அந் நாள் இந்துக்களுக்கு மிகவும் முக்கிய மான தினங்களில் ஒன்று. அன்றைய தினம் இந்துக்கள் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு இறை வழிபாடுசெய்வ தால் அதற்குத் தேவையான பொருள்கள் போதியளவு கிடைக்கக்கூடியதான ஏற் பாடுகள் செய் யப்பட வேண்டியது முக் கியமாகும்.

தற்சமயம் குறிப்பிட்ட பொருள்கள் ஓரளவு வழங்கப்பட்டது. எனினும் அவை வீட்டுப் பாவனைக்கென பயன் படுத்தப்பட்டுள்ளது.

எனவே, தீபத்திருநாளை முன் னிட்டு மேற்படி பொருள்களை வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் அத்தியாவ சிய உணவுப் பொருள்களையும் அனைத்து மக்களும் தாராளமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைச் சர்கள் மற்றும் அதிகாரிகள் உரிய செயற் பாடுகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (203-111)

### நாளை

கார்த்திகை 05
செவ்வாய்கிழமை
21.11.2006
திதி : பிரதமை
பின்னிரவு : 04.52
நட்சத்திரம் : அனுஷம்
பின்னிரவு : 3.43
சூரியஉதயம் : 10.40
சூரியஅஸ்தமனம் : 22.10

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புசல்லாவயில் நேற்றும் மண்சரிவு; உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை

கம்பளை, நவ.20

நுவரெலியா பாலத்திற்கு அருகில் புசல்லாவ இரட்டைப்பாதை என்னும் இடத்தில் மீண்டும் மண்சரிவொன்று ஏற்பட்டுள்ளது. இதனால் புசல்லாவ கம்பளை பிரதான வீதியில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நுவரேலியாவிலிருந்து கொழும்பு செல்லும் வாகனங்கள் யாவும் தவலன்தன்னை - பூண்டுலோயா ஊடாக செல்லவேண்டியேற்பட்டது. இம்மண்சரிவு நள்ளிரவில் ஏற்பட்டமையால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார் பாதையில் குவிந்துள்ள மண் உட்பட பாறாங்கற்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகரசபையின் புல்டோசர் இயந்திரங்கள் மண் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன.

பேராதனை பல்கலைக்கழக புவியியல் நிபுணர்கள் இரட்டைப் பாதைக்கு வந்து மண்மாதிரிகளைப் பெற்று பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

## மட்டு. வவுணதீவில் 2 படையினர் காயம்

மட்டக்களப்பு, வவுணதீவு இராணுவ முன்னரங்க காவலரண் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 2 இராணுவத்தினர் காயமடைந்தனர் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. காலை 5.55 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது எனவும்- இதன்பின்னர் இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர் எனவும்- பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது.

## இணைத்தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ-9 பாதை திறப்பு தொடர்பிலான பேச்சுகள் நடத்த அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இணைத் தலைமை நாடுகள் வேண்டுகோள் விடுக்கக் கூடும் என்று தெரிகிறது.

ஏ-9 வீதியைத் திறப்பதற்கு இரண்டு தரப்புகளும் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இணைத் தலைமை அழுத்தம் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவுசெய்வதோடு மக்களிடையே நம்பிக்கையைக் கட்டி எழுப்பவும் பெரிதும் உதவும்.

இன்றைய தினத்திற்கு முன்னர் வெளிப்படுத்த முடியாதவாறு (Embargo) ஜனாதிபதி செயலகத்தால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமை காரணமாக ஏ-9 பாதை ஊடாக குடாநாட்டுக்கான பொருள்களை எடுத்துச்செல்ல முடியாத சூழ்நிலையில் -

அத்தியாவசிய உணவுப்பொருள்களும் எரிபொருள்களும் கடல் வழிப்போக்குவரத்து மூலமே எடுத்துச்சென்று விநியோகிக்கப்படுகின்றன -

பாதகமான காலநிலை, வர்த்தக நிலையங்களை மூடுமாறு வர்த்தகர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள், மனிதாபிமானப் பொருள்களையும் மக்களையும் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றின் மத்தியிலும் அரசாங்கம் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களைத் தளர்வின்றி எடுத்துச் சென்றதாக ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது.

## மாணவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திருகோணமலையில் ஐந்து அப்பாவி மாணவர்கள் தலையில் சுடப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை ஒத்த பாணியில் வவுனியாவில் இந்தக் கொலைகள் புரியப்பட்டிருக்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்திருக்கிறது.

இந்தக் கொடூரக் கொலைகளுக்கு கண்டனத்தையும், துயரத்தையும் வெளிப்படுத்தும் முகமாக இன்று திங்கள் கிழமை வவுனியா முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் எவையும் இன்று இயங்கமாட்டா.வர்த்தக நிறுவனங்களும் மூடப்படும். அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இதேவேளை -

பல மாணவ அமைப்புகள் இந்தப் படுகொலைகளைக் கண்டித்து அறிக்கைகளை விடுத்துள்ளன.

விவசாயக் கல்லூரிக்குள் அத்து மீறி நுழைந்து அப்பட்டமான முறையில் மாணவர்களைக் கொன்றும் காயப்படுத்தியும் அட்டகாசம் புரிந்த படையினரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அத்தியட்சகரான குணவர்தன, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த குணசேகர, வவுனியா தலைமை அலுவலக பொலிஸ் அதிகாரி சாந்த நாயக்க, குற்றத் தடுப்பு அதிகாரி தர்மதாஸ, வவுனியா படை அதிகாரி கேணல் பெர்னாண்டோ ஆகியோர் நேற்று முன்தினம் வவுனியா விவசாயக் கல்லூரிக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர்.

முதலில் அப்பகுதி படையினரிடமும், பின்னர் விவசாயக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களிடமும் நீதிபதி இளஞ்செழியன் விசாரணை மேற்கொண்டார்.

வாக்கு மூலம் வழங்கிய மாணவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை, பயமாக இருக்கிறது என்று நீதிபதியிடம் கதறி அழுதவாறு தெரிவித்தனர். விவசாயக் கல்லூரி அதிபர் திருமதி கைலேஷ் வரனிடமும் நீதிபதி வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டார்.

கல்லூரியில் தொடர்ந்து தங்கியிருக்கத் தமக்குப் பயமாக உள்ளது என்று நீதிபதியைச் சூழ்ந்து கொண்டு மாணவர்கள் கதறினர்.

இதனையடுத்து விவசாயக் கல்லூரிக்குத் தற்காலிகமாகப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு நீதிபதி, பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கல்லூரிப் பகுதியில் தற்காலிகப் பொலிஸ் நிலை ஒன்று நிறுவப்பட்டது.

விவசாயக் கல்லூரிக்கு முன்பாக உள்ள இராணுவக் காவலரணில் தங்கியிருந்த படையினரை விசாரணை செய்யுமாறும், விவசாயக் கல்லூரியின் பின்புறமாக வயல் வெளியினூடாக வந்த படையினர் எந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்பதை உடனடியாகத் தெரிவிக்குமாறும், தாக்கு தலுக்குப் படையினர் பயன்படுத்திய துப்பாக்கிகளைக் கைப்பற்றுமாறும் நீதிபதி, பொலிஸாருக்குப் பணித்தார். (ஐ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கிய புதுடில்லியின் கரிசனையை வெளிப்படுத்தும் கடிதம் ஒன்றை சிவ்சங்கர் மேனன் கொழும்புக்கு எடுத்து வருவார் என்று ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மையில் வடக்கு - கிழக்கில் அப்பாவி தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் உயிரிழக்கக் காரணமான சம்பவங்கள் தொடர்பில் இந்தியாவின் ஆழ்ந்த வருத்தத்தை அவர் கொழும்பில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று நாள் விஜயம் மேற்கொள்ளும் சிவ்சங்கர் மேனன் பெரும்பாலும் வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பார்.

இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலராகக் கடமையேற்ற பிறகு சிவ்சங்கர் மேனன் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது ராஜதந்திர ரீதியான விஜயம் இதுவாகும்.

ஜெனிவாவில் அரசு - புலிகள் பேச்சு நடைபெற்ற காலத்தில் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வரவிருந்தார். ஆனால், திடீரென அவரது பயண அட்டவணை மாற்றப்பட்டது.

இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்கள் தொடர்பாக தமிழகத்து மக்கள் மத்தியில் உருவாகிவரும் கொந்தளிப்பு புதுடில்லிக்கு நெருக்குதல் தர ஆரம்பித்திருக்கும் சுழலில் மேனன் கொழும்பு வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் தொடர்பில் இந்தியாவின் கவலையும், கரிசனையும் வெளியுறவுச் செயலரின் கொழும்பு விஜயத்தின்போது இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 8 அரசியல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது என்றும் புலனாய்வுப் பிரிவினர் தகவல் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனுக்கும் கொலை அச்சுறுத்தல் இருக்கிறது என்று பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள எட்டு அரசியல் பிரமுகர்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது என்று முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவென நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா தெரிவித்தார்.

கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குவென விசேட அதிரடிப்படையினரையும், இராணுவத்தினரையும் நியமிக்க வுள்ளோம் என்றும் சரத் பெரேரா தெரிவித்தார். (ஐ)


## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி மணிதிருநாவுக்கரசு

**(இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி)**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது 12/1, பள்ளிவாசல் வீதி, கொழும்பு - 15 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மணிதிருநாவுக்கரசு நேற்றுமுன்தினம் (18.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி- தங்கரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், அராலி காலஞ்சென்ற இராசையா - சத்தியவதி தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (ஜேர்மனி), யசோதரா (கனடா), செந்தூரன் (கணக்காளர்), ஜெயசாந்தினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வேஸ்வரி (ஜேர்மனி), சாமிநாதன் (கனடா) ஆகியோரின் மாமனும், ஜதுர்ஷன், ஸபரிஷா, அன்பரசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20.11.2006) திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதம்பிட்டி இந்து மயானத்துக்கு முற்பகல் 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

தொ.பே: 011-4957934 **குடும்பத்தினர்.**

### திருமதி சின்னத்துரை நேசமலர்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 37/21 மட்டக்குளி கொழும்பு-15ஐ வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி சின்னத்துரை நேசமலர் 15.11.2006 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி இராசு - குலமணி தம்பதியரின் மூத்த மகளும் கந்தையா சின்னத்துரையின் அன்பு மனைவியும் சிவாகரன் (பிரபா), பிரியதர்சினி (பிரியா), சிவசுதன் (சுதன்), சிவறூபன் (கூபி), சிவசங்கர் (சங்கர்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கந்தையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் உதயலிங்கம், சஜி, கவிதா ஆகியோரின் மாமியும் துரை, காந்தன், மோகன், குகன், குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசமணி, இரத்தினதேவி, இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் பட்டு, மனோ, சித்திரா, இராசாத்தி ஜெயா ஆகியோரின் மைத்துனியும் இராசமணி தேவரட்னம், ஜோஸ் ஆகியோரின் சகோதரியும் ரமேஸ், கிரி, தீபா, சுபா, முகுந்தன், சோபா, கோபிகா, கார்திகா, ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் மியுசியா, அவினாஸ், அவித்தியா, வினுஸ்கா, மேஷாக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு பொரளை கனத்தை மயானத்தில் இன்று (20.11.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ. பே.: 0112521856, 0775187679.* (55420) தகவல்: **குடும்பத்தினர்.**

### நடராசா சுதர்சன்

**(களஞ்சியப் பொறுப்பாளர், லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்)**

காங்கேசன்துறை கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும், தாவடி வடக்கு வன்னியசிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சுதர்சன் (18.11.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான நடராசா - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், ஜெயமலரின் அன்புக் கணவரும் திருமதி ரஞ்சனா சிறீதரன், கந்தவேள் (யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி அனுஷா சிவராசா, நரேந்திரன் (ஆசிரியர்), திருமதி கெங்கா பரமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயபாலன் (இலங்கை வங்கி, சுன்னாகம்), ஜெயந்தி (கு.ந.சே.உ., தாவடி), ஜெயரூபன் (பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.11.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குநடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு கொக்குவில்.* (55421) தகவல்: **மனைவி.**

## மரண அறிவித்தல்கள்

### விநாசித்தம்பி (விசுவப்பா) வைத்திலிங்கம்

**(முன்னாள் கணக்கு பரிசோதகர் யாழ். மாநகரசபை, முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - மூதூர்)**

காரைநகர், சத்திரந்தை களபூமியைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி - வைத்திலிங்கம் நேற்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி - சீதேவிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாலாமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சரஸ்வதி, நேசரத்தினம் மற்றும் பாலாம்பிகை, பூமணி, சௌந்தராம்பிகை, தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சந்திரகுமார், வைத்திய கலாநிதி வசந்தகுமாரி, மோகனகுமார் மற்றும் சாந்தகுமாரி (கனடா), சிவகுமார் (குமரன் பாம் - கோண்டாவில்), ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிருஷன் (கனடா), உமா (ஆசிரியை - யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் லக்சன், ஷாலினி, சிவமைந்தன், சிவமித்திரன், சிவஜனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

*அரசடி வீதி, நல்லூர்.* **மனைவி, பிள்ளைகள்.**

### கார்த்திகேசு மார்க்கண்டு

40, அரச வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மார்க்கண்டு நேற்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் புஸ்பமணி, கமலபூசணி, ஈஸ்வரிஅம்மா, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40, அரச வீதி, நல்லூர்.* தகவல்: **குடும்பத்தினர்.**


*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org